DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 165/2024** Date: 23.06.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 8** |
| Name | : | முனுசாமி |
| Father's Name | : | குப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 23.06.2025.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது ஏ.ஜெட்டிஅள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் வருடம் தடங்கம் பஞ்சாயத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது நல்லம்பள்ளி வட்டாச்சியர் அவர்கள் சொன்னதன்பேரில் CBCID அலுவலகத்திற்கு 12.10.2020 ம் தேதி மாலை 4.00 மணிக்கு சென்றேன். அங்கு நான் செல்வதற்கு முன்னதாக வித்யா என்பவரை காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். அவர் என் முன்னிலையில் வாக்குமூலம் அளித்தார். அப்போது வித்யா என்பவர் PM KISSAN திட்டத்தில் தவறான பயனாளிகளை சேர்த்து சுமார் 3 லட்சம் முறைகேடு செய்ததாக கூறினார். மேற்படி வித்யா கூறியதை தட்டச்சு செய்து அவரிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வித்யா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.9 ஆகும்.** இதுகுறித்து CBCID போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 17 வருடமாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். நான் அழைப்பாணையின் சார்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். என்னை CBCID அலுவலகத்திலிந்து நேரடியாக தொடர்பு கொண்டு நீதிமன்றத்திற்கு வருமாறு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வட்டாச்சியர்

எழுத்துபூர்வமான அனுமதி எதுவும் அளித்தாரா என்றால் இல்லை. நான் எப்போதும் என்னுடைய அலுவலக முத்திரை வைத்துதான் கையொப்பம் செய்வேன் என்றால் அலுவலகத்தில் இருந்தால் அவ்வாறு கையொப்பம் செய்வேன். என்னுடன் வேளாண் அலுவலர் ஒருவர் உடன் இருந்தார். அவர் பெயர் மணிவண்ணன்.

2. நான் CBCID அலுவலகத்திற்கு சென்றபோது மாலை 4.00 மணியிருக்கும். அங்கு இரவு 7.30 மணிவரை இருந்தேன். நான் அலுவலல் ரீதியாக வெளியே செல்லும்போது கிராம நிர்வாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளில் பதிவுசெய்யவேண்டும் என்றால் அதற்கு தனியாக பதிவேடுகள் இல்லை, வெளியில் அறிவிப்பு பலகையில் அதை குறிப்பிடுவேன். எத்தனை பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. தட்டச்சு செய்யப்பட்டதில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தற்போது நியாபகமில்லை. நான் சொல்லும் நாளில் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லும் நாள், நேரத்தில் அந்த இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் CBCID அலுவலகம் செல்லாததால்தான் வட்டாச்சியர் எனக்கு எழுத்துபூர்வமான அனுமதி கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் சொன்ன நாள், நேரத்தில் CBCID அலுவலகம் செல்லவில்லை என்றும், அவ்வாறு சென்றிருந்தால் எனக்கு வாக்குமூலத்திலுள்ள விவரம் தெரிந்திருக்கும் என்றும், வழக்கிற்காக நியாபகமில்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் வழக்கிற்காக கையொப்பம் மட்டும் பெறப்பட்டது என்றும், என் முன்னிலையில் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 165/2024** Date: 23.06.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 9** |
| Name | : | மணிவண்ணன் |
| Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 23.06.2025.

( எதிரிகள் 1,2 ஆஜரில் இல்லை. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தருமபுரி வேளாண்மை அலுவலகத்தில் விதை பரிசோதனை நிலையத்தில் வேளாண்மை அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் வருடம் பென்னாகரம் வட்டத்தில் வேளாண்மை அலுவலராக பணியிலிருந்தபோது 12.10.2020 ம் தேதி மாலை 4.15 மணிக்கு CBCID அலுவலகத்தில் விசாரணைக்காக வித்யா என்பவர் இருந்தார். அப்போது போலிசார் விசாரித்தபோது வித்யா என்பவர் PM KISSAN திட்டத்தில் முறைகேடாக 184 பேரிடம் ஆவணங்கள் எதுவும் பெறாமல் பதிவுசெய்ததாக வாக்குமூலம் அளித்தார். ஒரு நபரிடம் 1750 ரூபாய் வீதம் 184 நபரிடம் பெற்றதாகவும் சுமார் 3 லட்சம் ரூபாய் முறைகேடாக பெற்றதாக கூறினார். அவர் சொன்ன விவரங்களை போலிசார் வாக்குமூலமாக தட்டச்சு செய்து பதிவுசெய்துக்கொண்டார்கள். அதில் நானும், அப்போதைய தடங்கம் கிராம நிர்வாக அலுவலர் திரு.முனுசாமியும், கையொப்பம் செய்தார். என்னிடம் காணப்பிக்கப்படும் வித்யா என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.10 ஆகும்.** விசாரணையின்போது மேற்படி வித்யா என்பவரை நான் பார்த்தேன். தற்போது அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பென்னாகரம் வட்டத்திலும் PMKISSAN திட்டத்தின் கீழ் நிறைய முறைகேடு நடந்ததாக எனக்கு தெரியும் என்றால் சரிதான். வித்யா எந்த ஊரைச்சேர்ந்தவர் என்பது தெரியுமா என்றால் தெரியும், அவர் பாப்பாரப்பட்டியை சேர்ந்தவர் என விசாரணையின்போது தெரிந்துக்கொண்டேன். விசாரணைக்கு முன்னர் அவரை நான் எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் பார்த்ததில்லை. வித்யாவை எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் மாலை 4.15 முதல் இரவு 7.15 வரை விசாரித்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் இங்கு ஆஜரானபோது கொடுத்த ஆவணத்தை படித்து பார்த்து மேற்படி விவரங்களை தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் பணியிலிருந்தேனா அல்லது விடுப்பில் இருந்தேனா என்றால் பணியில் இருந்தேன்.

2. என்னை விசாரணைக்கு அழைத்தது PMKISSAN திட்டம் பற்றி விசாரிக்கத்தான் அழைத்தார்கள் என்றால் சரிதான். நான் CBCID அலுவலகத்திற்கு அன்றைய தினம் எப்போது வந்தேன் என்றால் அலுவல் ரீதியாக பகல் 12.00 மணிக்கு வந்தேன். நான் 12.10.2020 ம் தேதி CBCID ஆய்வாளர் அழைத்தன்பேரில் விசாரணைக்கு CBCID அலுவலகத்தில் ஆஜரானேன். பகல் 12.10 மணிக்கு வித்யா CBCID அலுவலகத்தில் இருந்தாரா என்றால் இல்லை. என்னை எதற்காக CBCID அலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைத்தார்கள் என்றால் பென்னாகரம் வட்டம் PMKISSAN திட்டத்தில் நடந்த முறைகேடு சம்பந்தமாக விசாரிப்பதற்காக அழைத்தார்கள். அன்றைய தினம் பகல் 12.10 மணிமுதல் CBCID அலுவலகத்தில் இருந்தேன் என்றால் சரிதான்.

3. விசாரணைக்காக என்னுடன் வேளாண் உதவி இயக்குநர் திருமதி. புவனேஷ்வரி வந்திருந்தார். என்னை இரவு 7.15 மணிவரை விசாரித்தார்கள். நான் வித்யாவை விசாரித்தபோது CBCID அலுவலகத்தில் இல்லை என்றால் சரியல்ல. E- சேவை மையத்தில் வேலை செய்த நபர்களை எனது அலுவலகத்தில் இருந்த நபர்களை மட்டும் தான் விசாரித்தனர் என்றால் சரியல்ல. 12.10.2020 ம் தேதி நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் வித்யாவை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், வித்யா என் முன்னிலையில் வாக்குமூலம் எதுவும் நான் சொன்னதுபோல் கொடுக்கவில்லை என்றும், இன்று நீதிமன்றத்தில் ஆஜரான பின்னிட்டு போலிசார் பதிவுசெய்திருந்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வித்யா பாப்பாரப்பட்டியில் குடியிருக்கவில்லை என்றும், அவ்வாறு குடியிருந்துவருகிறார் என்ற விவரத்தை வாக்குமூலம் மூலமாக தெரிந்துக்கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் CBCID ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**